# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்

ந.க. எண் 2309 / 1431 / டி3 / நாள் 06.06.2022

## ***ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு***

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் தொடர்புடைய கல்வெட்டுக்கள் மற்றும் பசலி 1432க்கு 01.07.2022 முதல் 30.06.2023 முடிய உள்ள காலத்திற்கு தேவையான கட்டணச்சீட்டுகள் மற்றும் படிவங்கள் அச்சிடும் பணிக்கான ஒப்பந்தபுள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| டெண்டர் கொடுக்க கடைசி நாள் / நேரம் | 30.06.2022 | பிற்பகல் 4.00 மணி |
| டெண்டர் திறப்பு நடைபெறும் நாள் / நேரம் | 30.06.2022 | பிற்பகல் 5.00 மணி |
| டெண்டர் திறப்பு நடைபெறும் இடம் | அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் (ரெங்கவிலாச மண்டபம்) | |

| டெண்டர் இனங்கள் | டெபாசிட் தொகை வரைவோலை ₹. |
|---|---|
| 1. ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் தொடர்புடைய கல்வெட்டுக்களை புத்தகமாக அச்சிட்டு தேவைக்கேற்ப வழங்குதல் | 10,000/– |
| 2. பசலி 1432 தேவையான அர்ச்சனை வகை கட்டணச் சீட்டு புத்தகங்கள் மற்றும் இந்துசமய அறநிலையத்துறை சம்பந்தப்பட்ட பதிவேடுகள் – படிவங்கள் மற்றும் இதர வகை பதிவேடுகள் முதலியன அச்சிட்டு வழங்குதல் | 10,000/– |

ஒப்பந்தப்புள்ளி தொடர்பான இதர நிபந்தனைகளை அலுவலக வேலை நாட்களில், அலுவலக நேரங்களில் திருக்கோயில் இணையதளம் www.srirangam.org மற்றும் www.hrce.tn.gov.in என்ற வலைதளத்திலும், நேரிலும் வந்து தெரிந்து கொள்ளலாம்.

**சீ. செல்வராஜ்,**
தக்கார் / இணை ஆணையர்

**செ. மாரிமுத்து,**
இணை ஆணையர் / செயல் அலுவலர்

# அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்

ந.க. எண் 2309 / 1431 / டி3 / நாள் 06.06.2022

## ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயிலின் கல்வெட்டுகளை அச்சிட்டுக் கொடுக்க கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 30.06.2022ஆம் தேதி மாலை 4.00 மணிக்குள் வரவேற்கப்படுகிறது. டெண்டர் படிவத்தின் விலை ரூ.500/– ஆகும். இதனை 30.06.2022 நண்பகல் 12.00 மணிவரை திருக்கோயிலில் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

## நிபந்தனைகள்

1. ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் ₹.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) ***இணை ஆணையர்/செயல் அலுவலர் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம் என்ற பெயரில்*** டெண்டர் டெபாசிட் தொகை செலுத்தி ரசீது பெற்று டெண்டர் மீது ரசீது எண். குறிப்பிட்டு டெண்டர் கவர் மூடி, முத்திரையிட்டு உரிய காலத்தில் கொடுக்க வேண்டும். டெண்டர் டெபாசிட் தொகைக்கு வட்டி ஏதும் கிடையாது.
2. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அச்சுபணி விவரம் Details of Printing Work–ல் கண்டுள்ளவாறு, புத்தங்கள் திருக்கோயிலின் தேவைக்கேற்ப (As Per Indent) எண்ணிக்கையில் அச்சிட்டு வழங்க வேண்டும்.
3. டெண்டர் கொடுப்பவர்கள், திருக்கோயில் டெண்டர் படிவத்தில், பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.
4. வரப்பெற்ற டெண்டர் 30.06.2022 ஆம் தேதியன்று மாலை 5.00 மணியளவில் ஆஜரில் உள்ளவர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.
5. டெண்டரை ஏற்கவோ, நிராகரிக்கவோ, வேறு தேதிக்கு மாற்றவோ இணை ஆணையர் / செயல் அலுவலருக்கு பூரண அதிகாரம் உண்டு. டெண்டர் நிபந்தனைகளில் கூட்டவோ, குறைக்கவோ, திருத்தவோ திருக்கோயில் நிர்வாகத்திற்கு உரிமை உள்ளது.
6. டெண்டர் இந்து சமய அறநிலையத்துறை ஆணையரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு அனுமதி வழங்கப்படும்.
7. டெண்டர் உறுதி ஆகாதவர்கள் டெண்டர் டெபாசிட் வேண்டும் பொழுது அசல் ரசீதுடன் விண்ணப்பிக்க வேண்டும்.
8. டெண்டர் உறுதியானவர் அச்சிட வேண்டிய புத்தங்களின் மாதிரியினை (Proof) இத்திருக்கோயிலின் ஒப்புதல் பெற்ற பின்னரே அச்சிட வேண்டும்.
9. புத்தங்கள் அச்சிட முன்பணம் வழங்கப்படமாட்டாது. டெண்டர் வழங்கும் நபர் / நிறுவனம் குறைந்தபட்சம் 5 வருடங்கள் புத்தகம் அச்சிடுவதற்கான முன் அனுபவம் பெற்று இருக்க வேண்டும். அதற்கான சான்றுபெற்று இருக்க வேண்டும்.
10. டெண்டர் தொடர்பாக சந்தேகம் ஏற்பட்டால் திருக்கோயில் நிர்வாகம் அளிக்கும் தெளிவுரையே முடிவானதாகும்.
11. இதர விபரங்களை திருக்கோயில் அலுவலகத்தில் அலுவலக வேலைநாட்களில், வேலை நேரங்களில் தெரிந்து கொள்ளலாம்.

திருக்கோயில் நிர்வாகம்

# <u>அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், ஸ்ரீரங்கம்</u>

**<u>ந.க. எண் 5546 / 1431 / டி 3 (1) / நாள்</u>**

## <u>கட்டணச் சீட்டுகள் அச்சிடுதல் மறு ஒப்பந்தப்புள்ளி விளம்பரம்</u>

திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில் உபயோகத்திற்கு பசலி 1432 தேவையான அர்ச்சனை வகை கட்டணச் சீட்டு புத்தகங்கள் மற்றும் இந்துசமய அறநிலையத்துறை சம்பந்தப்பட்ட பதிவேடுகள் – படிவங்கள் மற்றும் இதர வகை பதிவேடுகள் முதலியன அச்சிட்டு வழங்க 27.05.2022 மாலை 4.00 மணிவரை ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் டெண்டர்கள் ஏதும் வரப்பெறாததால் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு மூடி முத்திரையிடப்பட்ட மறு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. மேற்படி மறு ஒப்பந்தப்புள்ளிகள் வருகை தரும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் முன்னிலையில் **30.06.2022** அன்று மாலை 5.00 மணியளவில் இணை ஆணையர்/செயல் அலுவலரால் திறக்கப்படும்.

## <u>நிபந்தனைகள்</u>

1. திருக்கோயில் உபயோகத்திற்கு தேவையான அச்சிட்டு வழங்க வேண்டிய விபரங்கள் அடங்கிய பட்டியல் (**Tender Schedule Form**) ₹.20/– செலுத்தி திருக்கோயில் அலுவலகத்தில் …….**06.2022** தேதி பகல் **12.00** மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.

2. மறு ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் வைப்புத் தொகையாக ₹.10,000/– வரைவோலையாக திருக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்று ரசீது எண்ணை கடித உறைமேல் குறிப்பிட்டு கொடுக்க வேண்டும்.

3. மறு ஒப்பந்தப்புள்ளி கொடுப்பவர்கள் விபரப்பட்டியல் (Schedule Form) குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு எதிரில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு ஏற்பட்ட மொத்த தொகையைத்தான் தெளிவாக குறிப்பிட வேண்டும். மேலும் விற்பனைச் சீட்டு புத்தகங்கள், படிவங்கள், பதிவேடுகள் மற்றும் மேல் அட்டைகள் (Wrapper) முதலானவற்றிற்கு மாதிரித்தாள் (Sample Paper) இணைத்து அனுப்பப்பட வேண்டும். அவ்வாறு மாதிரித்தாள் இணைத்து அனுப்பாத மறு ஒப்பந்தப்புள்ளிகள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும். மேலும் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் கடந்த 5 ஆண்டு காலத்தில் பிரபர திருக்கோயில்களில் ஒப்பந்தங்கள் பெற்று பணிபுரிந்த அனுபவத்திற்கான சான்றும், டெண்டருடன் இணைக்கப்பட வேண்டும்.

4. மறு ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் பெற்றவர்கள் தனது சொந்தப் பொறுப்பில் **₹.20/–** மதிப்புள்ள அரசு முத்திரைத்தாள் (ஸ்டாம்ப்) (Non Judicial Paper) தாக்கல் செய்து திருக்கோயில் வாசகப்படி முச்சலிக்கா எழுதி கையொப்பம் செய்து தர வேண்டும்.

5. மறு ஒப்பந்தப்புள்ளி உறுதி செய்யப்பட்டு உத்தரவு வழங்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளிக்காரர் சப்ளை செய்யும் இனங்களில் அச்சுக்கூலியில் 10 சதவிகிதம் பிடித்தம் செய்து தொகை வழங்கப்படும். இத்தொகை 1432ம் பசலி தணிக்கை அறிக்கை பெறப்பட்டபின் திரும்ப வழங்கப்படும்.

6. உறுதி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அச்சிட உத்தரவு பெற்ற பின்னர் அச்சிடுவதற்கு முன்பு மாதிரிப் பிரதிகளை அலுவலகத்தில் காண்பித்து சரிபார்த்து ஒப்புதல் பெற்ற பின்னரே அச்சிட்டு வழங்க வேண்டும். சரிபார்க்கப்படாத அச்சிடப்பட்ட இனங்கள் ஏற்கப்பட மாட்டாது.

7. உறுதி செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் எக்காரணத்தினாலாவது உத்தரவு செய்யப்பட்ட இனங்கள் தங்களால் குறித்த காலத்தில் அச்சிட்டு வழங்க இயலாது போனால் தாங்களே தங்களது பொறுப்பில் ஒத்துக்கொள்ளப்பட்ட விலைப்புள்ளிக்கே வேறு இடத்தில் காலதாமதமின்றி அச்சிட்டு வழங்க வேண்டும். அதனால் ஏற்படும் சகல நஷ்டங்களுக்கும் மேற்படியார்களே பொறுப்பாளியாவார்கள்.

8. அனுப்பப்படும் மறு ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைப்படி இல்லாதிருப்பின் மேற்படி ஒப்பந்தப்புள்ளியை காரணம் கூறாமல் நிராகரிக்கும் அதிகாரம் இணை ஆணையர்/செயல் அலுவலருக்கு உண்டு.

9. உறுதி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர் அச்சிட்டு வழங்கிய இனங்களில் ஏதாவது குறைபாடுகள் காண நேரிட்டால் ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் தங்களது சொந்தப் பொறுப்பில் மேற்படி குறைகளை நிவர்த்தி செய்து கொடுக்க வேண்டும்.

10. உறுதி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அச்சிட்டு வழங்கும் விற்பனைச் சீட்டு புத்தகங்கள் படிவங்கள் மற்றும் பதிவேடுகள் முதலானவற்றை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரித்தாளில் தெளிவான எழுத்துக்களாலும் எவ்வித குறைபாடும் இன்றி (ஒப்பந்தப்புள்ளியில் குறைப்பிட்டவாறு) அச்சிட்டு ஒப்பந்தப்புள்ளிதாரரின் சொந்த செலவில் ஆலய அலுவலகத்திற்கு நேரிடையாக வழங்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு மேல் தேவைப்பட்டால் ஆர்டர் கொடுத்தால் அவைகளையும் அதே ரேட்டுக்கே அச்சிட்டு வழங்க வேண்டும்.

11. உறுதி செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு டிக்கட் புத்தகம் மற்றும் பதிவேடுகள் அச்சிட முன்பணம் வழங்கப்பட மாட்டாது.

12. உறுதி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிதாரர்கள் அச்சிட்ட இனங்களை தங்கள் சொந்தப் பொறுப்பில் நேரிடையாக திருக்கோயில் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும்.

13. வருமான வரி நிரந்தர கணக்கு எண் (Pan Card Number) உள்ளவர்கள் மட்டுமே ஏலம் / டெண்டரில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

14. உரிமதாரருக்கு வழங்கப்படும் பட்டியல்களில் தொகைக்கு உரிய வருமானவரி 2 சதவிகிதமும் வருமானவரிக்கு உண்டான சர்–சார்ஜ் 15 சதவிகிதமும் பிடித்தம் செய்யப்படும்.

15. திருக்கோயிலுக்கு குத்தகை பாக்கி வைத்திருப்பவர்கள், திருக்கோயிலுக்கு எதிராக வழக்கு தொடர்ந்தவர்கள் மேற்படி டெண்டரில் கலந்துகொள்ள அனுமதியில்லை.

16. மறு ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக சந்தேகம் ஏற்பட்டால் திருக்கோயில் நிர்வாகம் அளிக்கும் தெளிவுரையே முடிவானதாகும்.

17. இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலக வேலை நேரங்களில், வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.

– திருக்கோயில் நிர்வாகம்.